# இணைந்த ஊடக அறிக்கை

**7 மார்ச்** 2018 (**கொழும்பு, இலங்கை**): இலங்கை உலக சுகாதார நிறுவனம் (WHO), மற்றும் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம், இலங்கை ஆகிய இரு அமைப்புக்களும் இன்று காலை சமீபத்திய இன வன்முறைகள் தொடர்பாக இலங்கை ஐக்கிய நாடுகள் அமைப்பினால் வெளியிடப்பட்ட அறிக்கையை இணைந்து எதிரொலிக்கும் அதேசமயம் இத்தகைய நடவடிக்கைகளை வன்மையாக கண்டிக்கின்றன.

குறிப்பாக இனப்பெருக்க சுகாதாரம் தொடர்பான தவறான தகவல் ஒன்றினால் இடம்பெற்ற அம்பாறைச் சம்பவம் தொடர்பான தவறான எண்ணப்பாட்டை நீக்கும் பொருட்டே WHO மற்றும் UNFPA இனால் இந்த இணைந்த அறிக்கை வெளியிடப்படுகிறது.

தற்போதைய ஐநா வதிவிட ஒருங்கமைப்பாளரான WHO இலங்கைப்பிரதிநிதி Dr. ரசியா பென்ட்சே தெரிவித்ததாவது : "ஒரு மனிதனை நிரந்தரமாக இனவிருத்தி செய்ய முடியாதவராக்கக்கூடியதான மருந்து என்ற ஒன்றே இல்லை அல்லது அறியப்படவில்லை. ஆகவே நிரந்தர ஆண்மைக்குறைவு மாத்திரை அல்லது நிரந்தர மலடாக்கல் மாத்திரை உணவோடு கலக்கப்பட்டது என்ற கருத்தே அடிப்படையற்றதும், விஞ்ஞான ரீதியாக சாத்தியமற்றதும் ஆகும்".

UNFPA இலங்கைப்பிரதிநிதி, திருமதி. ரிட்சு நக்கேன் கருத்துத் தெரிவிக்கும் போது : " சரியான இனப்பெருக்க சுகாதாரத்தகவல்கள் மக்களுக்கு கிடைக்க வேண்டியதன் அவசியம், அதிலும் குறிப்பாக இளைஞர்களைச் சென்றடைய வேண்டிய அவசியம் மிகவும் வெளிப்படையாக தெரிகிறது. இனப்பெருக்க சுகாதாரம் குறித்த தவறான தகவல்கள் இனங்களுக்கிடையே வெறுப்பையும் பதட்டத்தையும் உருவாக்கப் பயன்படுத்தப்படுகின்றன. இது நடைபெறவே கூடாது." என்று தெரிவித்தார்.

WHO மற்றும் UNFPA ஆகியன அனைத்து இலங்கையர்களினதும் சிறந்த ஆரோக்கியம், நல்வாழ்வுக்காக பணிபுரியும் ஐக்கிய நாடுகள், இலங்கை அமைப்பைச் சேர்ந்த இரண்டு வதிவிட நிறுவனங்கள் ஆகும்.

ஐக்கிய நாடுகள் அமைப்போடு இணைந்து , WHO மற்றும் UNFPA ஆகியனவும் நாட்டில் சட்ட ஒழுங்கை நிலைநிறுத்துமாறும், மனித உரிமைகளையும், எல்லோருக்குமான பாதுகாப்பையும் உறுதி செய்யுமாறு அதிகாரத்தரப்பினரையும், பொதுமக்களையும் வேண்டி நிற்கின்றன.